(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 295.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2013 ஓகத்து 07, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2883/ '12

1.

கௌரவ மனுஷ நாணாயக்கார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) 2012 ஆம் ஆண்டில் காலி கல்வி வலயத்தில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில்,

(i) முதலாம் தரம் முதல் பதின்மூன்றாம் தரம் வரையிலான வகுப்புகளில் கல்வி கற்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வகுப்பின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) முதலாம் தரத்திற்கு நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைத் தவிர, வேறு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iii) முதலாம் தரத்திற்கு அவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி மாணவர்கள் யாவர் என்பதையும்;

(iv) முதலாம் தரத்தைத் தவிர, வேறு தரங்களுக்கும் மாணவர்கள் அனுமதிக்கப் பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) ஏனைய தரங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி மாணவர்கள் யாவர் என்பதையும்

தனித்தனியே அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைகளுக்கு நேர்முகப் பரீட்சைகளில் சித்தியடைகின்ற மாணவர்களைத் தவிர, வேறு மாணவர்களை அனுமதிப்பதற்கு அதிகாரமளிக்கின்ற சட்டரீதியான ஆவணங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி ஆவணங்களை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2903/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வானொலி நிலையங்களுக்கான அலைவரிசை ஒதுக்கீடு தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகிறதா என்பதையும்;

(ii) 2006 முதல் இற்றைவரை வானொலி நிலையங்களுக்கு அலைவரிசையை ஒதுக்கீடு செய்ததன் மூலம் அரசாங்கத்தினால் பெறப்பட்ட வருமானம் எவ்வளவு என்பதை கம்பனி அடிப்படையில் தனித்தனியாகவும்;

(iii) ஏற்கனவே ஒதுக்கப்பட்ட அலைவரிசைகளில் ஏதாவது மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு அதே அலைவரிசைகள் புதிய கம்பனிகள் எதற்காவது மீள் ஒதுக்கப்பட்டதா என்பதையும்;

(iv) அவ்வாறே, மேற்படி (iii) இன் பிரகாரம் அலைவரிசைகளை பெற்றுக்கொண்ட கம்பனிகளின் பெயர்களையும் அத்தகைய கம்பனிகளின் பணிப்பாளர்களின் பெயர்களையும்;

(v) வானொலி நிலையங்களுக்கு அலைவரிசைகளை மீள் ஒதுக்கீடு செய்ததன் மூலம் அரசாங்கத்தினால் பெறப்பட்ட வருமானத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2925/ '12

3.

கௌரவ புத்திக பதிரண,— தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பின்னவல யானைகள் சரணாலயத்துக்கு அண்மையில் மிருகக்காட்சி சாலையொன்றை நிர்மாணிப்பதற்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றதா;

(ii) அவ்வாறெனில், இதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணத்தில் தற்போது செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iii) இதன் நிர்மாணப் பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா;

(iv) இல்லையெனில், நிர்மாணிக்கப்பட வேண்டிய எஞ்சியுள்ள பகுதிகள் யாவை;

(v) மேற்படி பகுதிகளின் நிர்மாணிப்புகளை பூர்த்தி செய்வதற்காக செலவிட எதிர்பார்க்கப்பட்டுள்ள பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட புதிய மிருகக்காட்சிசாலையை திறப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள திகதி யாது;

(ii) மேற்படி மிருகக்காட்சிசாலை ஆரம்பிக்கப்படுவதைத் தொடர்ந்து தெஹிவளை மிருகக்காட்சிசாலையை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3053/ '12

4\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மகாவலிகம கனிஷ்ட வித்தியாலயத்தில் தற்போது கல்வி கற்கும் 249 மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக மூன்று ஆசிரியர்கள் மாத்திரமே இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையில் மேலும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) தொழிலற்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை கோரி குறிப்பிட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள கடும் சிரமங்கள் தொடர்பாக ஆராய்ந்து அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3285/ '12

5\.

கௌரவ பி. ஹரிசன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தனியார் நிறுவனமொன்றின் செலவில் மேற்கொள்ளப்பட்ட மதவாச்சிய அத்தாகட அட்டம்பகஸ்கட வீதிக்கு காப்பட் இட்டு செப்பனிடும் பணிக்காக பிறிதொரு ஒப்பந்தக்காரரினால் ரூபா நூற்று அறுபது இலட்சம் பணத் தொகை மோசடியான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மாகாணத்திலுள்ள வீதிகள் தொடர்பாக நன்கு விடயங்களை அறிந்திருந்த வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னாள் உயர் அதிகாரியொருவர் மேற்படி கொடுப்பனவை மோசடியான விதத்தில் சிபாரிசு செய்துள்ளாரென்பதையும்;

(iii) அனுராதபுரம் ஒயாமடுவயில் நடைபெற்ற 'தயட்ட கிருல' கண்காட்சிக்கு இணைவாக அனுராதபுரம் ஒயாமடுவ வீதியின் 3 கிலோமீட்டர் தூரத்தை செப்பனிடும் பணிக்கும் சுமார் ரூபா. 9 கோடி செலுத்தப்பட்டுள்ளதென்பதையும்

(iv) வடமத்திய மாகாண வீதிகளை செப்பனிடுவதற்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படுகையில் கேள்விப்பத்திர நடைமுறை முழுமையாக மீறப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கூறியவாறு எத்தனை வீதிகளை நிதி மோசடியுடன் செப்பனிட்டுள்ளதென்பதை ஆராய்வாரா என்பதையும்;

(ii) மேற்படி மோசடிகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3577/ '13

6.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கன் விமான சேவையை புனரமைப்பதற்காக ஐக்கிய அரபு எமிரேற் அரசின் ஒஸரேன் வங்கியிலிருந்து அமெரிக்க டொலர் 175 மில்லியன் கடன் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) பெறப்படும் ரூபா 21 பில்லியனில் ரூபா 15 பில்லியன் கடன்தொகை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு தீர்க்கப்படவுள்ளதா என்பதையும்;

(iv) விமான நிலையத்திற்காக தேவைப்படும் கடன்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) உள்ளக விமான நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக நுவரெலியா மாவட்டத்தில் பெருமளவிலான அரச காணிகள் இருக்கும் போது அதற்காக நுவரெலியா பொரலந்த பிரதேசத்தில் பேதுருதாலகால தோட்டத்தைத் தெரிவு செய்வதற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3730/ '13

7.

கௌரவ அனுர திசாநாயக்க,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையின் கீழுள்ள தென்னந் தோட்டங்கள் பிறருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி தோட்டங்களை கொள்வனவு செய்தவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தெங்குப் பயிர்ச்செய்கை சபைக்கு சொந்தமான வாரியபொல ரந்தெனிய தோட்டம் மற்றும் பன்னல நாம்பிரித்தன்கடவல கார்ட்லன்ட் தோட்டத்தின் ஊழியர்கள் குருநாகல் கனேவத்தையில் அமைந்துள்ள அன்ஜலோவத்தையில் (மெல்வத்த) சேவையில் ஈடுபடுத்தப்படும் அடிப்படை மற்றும் இதற்கு ஏற்புடையதான தொடர்பு யாதென்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் இலங்கைக்கு தேங்காய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இதன் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது அனைத்து வித தெங்குப்பயிர்ச் செய்கையாளர்களுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நிவாரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3776/ '13

8.

கௌரவ விஜித பேருகொட,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரித்தானிய ஆட்சியின் கீழும் சுதந்திரத்துக்குப் பின்னரும் இலங்கையில் நிர்வாக மாகாணப் பிரிவிடல்கள் பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட மாகாணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி மாகாண பிரிவிடல்கள் திருத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் யாவையென்பதையும்;

(iv) அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட மாகாணங்கள் பெயர் ரீதியாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3872/ '13

9.

கௌரவ செஹான் சேமசிங்க,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதிக்குள்,

(i) புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள, நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற, நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மற்றும் மேம்படுத்தப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நங்கூரமிடும் இடங்கள், உவர்நீர் மற்றும் நன்னீர் மீன்பிடித் துறைகள், ஐஸ் உற்பத்திச்சாலைகள், குளிரூட்டல் அறைகள், படகு திருத்தும் இடங்கள் மற்றும் வலை உற்பத்தித் தொழில்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மீன்பிடி நடவடிக்கைகளுக்காக புதிதாக ஈடுபடுத்தப்பட்டுள்ள மீன்பிடிக் கலங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2904/ '12

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கையடக்க மற்றும் சீ.டீ.எம்.ஏ. தொலைபேசிச் சேவைகளை செயற்படுத்துவதற்காக இதுவரை உரிமம் வழங்கப்பட்டுள்ள கம்பனிகளின் பெயர்களையும்;

(ii) இற்றை வரையிலான மேற்கூறிய கம்பனிகளின் பணிப்பாளர்களின் பெயர்களை தனித்தனியாகவும்;

(iii) 2006 ஆம் ஆண்டின் பின்னர், கையடக்க மற்றும் சீ.டீ.எம்.ஏ. தொலைபேசிச் சேவை வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட புதிய அலைவரிசைகளையும் தொலைபேசி இணைப்புக்களையும்;

(iv) மேற்படி கம்பனிகளின் பணிப்பாளர்களது பெயர்களைத் தனித்தனியாகவும்;

(v) அலைவரிசைகளின் மற்றும் தொலைபேசி இணைப்புகளை ஒதுக்கீடு செய்வதற்காக பெறப்பட்ட கோரிக்கைகளையும்;

(vi) 2011, 2012 ஆம் ஆண்டுகளில் மேற்கூறிய கம்பனிகளினால் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட தொகையை ஒவ்வொரு கம்பனிக்குமாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) சந்தை விலையை விட மிகக் குறைவான விலைக்கு கையடக்கத் தொலைபேசி இயக்குநர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டனவா என்பதை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2926/ '12

11.

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் தேசிய கல்வி ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ள பணத்தொகை யாது;

(ii) மேற்படி பணத்தை செலவழித்து மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் யாவை;

(iii) மேற்படி கருத்திட்டங்களை முகாமைத்துவம் செய்தவர்கள் யாவர்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்களுக்கு பணம் செலவிடப்பட்டமை குறித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதன் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் யாவை;

என்பதை குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

12\.
கௌரவ பி. ஹரிசன்,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்வலு, எரிசக்தி அமைச்சுக்குச் சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இந்த ஒவ்வொரு நிறுவனத்திலுமுள்ள அரச வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இந்நிறுவனங்களில் அரச வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவையென்பதையும்;

(iv) இவ்வுத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவ்வாகனங்களுக்கு கொடுப்பனவுகள் செய்யப்படும் முறை யாதென்பதையும்;

(iii) இவ்வாகனங்களுக்கு வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களை உபயோகிக்கும் உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள அரச வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட வாகனங்களை வேறுபடுத்தி இனங்காணும் முறையொன்று உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது பற்றித் தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(iii) அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் அரச வாகனங்களில் அரச இலச்சினையுடன் உரிய நிறுவனத்தின் பெயர் குறிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1\.
கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத்
திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் சம்பந்தமான, 2013.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2013 யூன் மாதம் 20 ஆம் திகதிய 1815/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

10.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

11.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

13.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

14.

பிலிப் குணவர்தன ஞாபகார்த்த சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.